## மாதந்தோறும் முதல் சனிக்கிழமை "சன்மார்க்க சொற்பொழிவு"

18



சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் மாதாந்திர சன்மார்க்க சொற்பொழிவில் சன்மார்க்க சீலர் பாண்டிச்சேரி தயவுமிகு **அருட்பா அருணாசலம்** அவர்கள் **"அருட்பா அமுதம்"** என்ற தலைப்பில் 01.06.2019 அன்று உரையாற்றினார்

---

# அடுத்த மாத சன்மார்க்க சொற்பொழிவு

19


## நித்ய தீப தருமச்சாலையில்

## மாதந்தோறும் முதல் சனிக்கிழமை சத்சங்கம் (சொற்பொழிவு)

நாள் : 6.7.2019 (சனிக்கிழமை) / நேரம் : மாலை 6.00 மணி முதல்

தலைப்பு : **"வள்ளலாரின் சாகாக் கல்வி"**

சொற்பொழிவாளர் : சன்மார்க்க உலகின் பேரறிஞர், சன்மார்க்கத்தின் முன்னோடி
தயவுமிகு **மு. பாலசுப்ரமணியம்** அவர்கள்
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்,
ஆழ்வார் திருநகர், சென்னை.



இடம் : **நித்ய தீப தருமச்சாலை**
7/8, புத்தேரிக்கரைத் தெரு,
தண்டீஸ்வரம் கோவில் அருகில், வேளச்சேரி,
சென்னை - 600 042.
செல் : 9444073635 / 22442515 / 9789494009

**ஆகம முடிகளும் அவைபுகல் முடிகளும்**
**ஏகுதற்கு அரிதாம் என்தனிச் சத்தே (1208)**

# தடாகத் தவளைகள்

அருள் விளக்கும் அலையாய்த் திகழும் அருட்பாவில் அருள் விளக்கமாலையில் ஓரிடத்தில்,


**"ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீரே உகந்த தண்ணீரிடை மலர்ந்த சுகந்த மணமலரே"** என்று வள்ளலார் குறிப்பிடுவார். தீஞ்சுவை நீரோடை என்பது வள்ளலாரின் வரலாற்றில் இடம் பெற்று இன்றும் சாட்சி சொல்கிறது. சுகந்த மணம் வீசக் கூடிய மலருக்குத் தேவையானது உகந்த தண்ணீர் அது நன்னீராய் இருக்க வேண்டும். அப்போது தான் அந்தத் தடாகத்தில் (குளத்தில்) பூக்கும் தாமரை மலர்களில் தேன் சொரியும்.

இப்போதுள்ள தலைமுறையில் பலருக்கு தாமரைத் தடாகம் எப்படி இருக்குமெனத் தெரிய வாய்ப்பு குறைவுதான். இருப்பினும் நான் சொல்ல வந்த கருத்தை சொல்லித்தான் ஆகவேண்டும். தடாகத்தில் தாமரை மலர்கள் பூத்திருக்கும். அதை எங்கிருந்தோ பறந்து வரும் தேனீக்கள் பருகும். தேன் கூடுகளைக் கட்டி தேனை சேகரிக்கும் ஜீவகாருண்ய உணவு என்று நாம் உண்பதெல்லாம் உண்மையில் ஜீவகாருண்ய உணவல்ல. பாத்திகளில் வளர்ந்து வரும் கீரைகளைப் பிடுங்குகிறோம். நெற்கதிரை அறுக்கிறோம். காய்களை பறிக்கிறோம். எனவே இவை மந்த ஞாயமுள்ள ஜீவகாருண்ய உணவு. தேன் மட்டும்தான் முழுக்க முழுக்க ஜீவகாருண்ய உணவு. அப்படிப்பட்ட உணவை தேடியெடுத்துத் தரும் தேனீக்கள் எங்கிருந்தோ வந்தவைதானே தவிர தடாகத்தில் தோன்றியவையல்ல!

ஆனால் அந்தத் தாமரைத் தடாகத்தில் பிறந்து, வளர்ந்து வாழும் தவளைகளோ தடாகத்திலுள்ள அழுக்கு, பூச்சி, கொசு போன்றவற்றிற்காக நாக்கை நீட்டிக்கொண்டிருக்கும். தாமரை மலர்கள் மீது கூட உட்காரும். ஆனால் குனிந்து அம்மலரிலுள்ள அத்தேனைப் பருகியதாக சரித்திரமில்லை. சொர்க்கம் மேலே இருப்பதாக எண்ணி, மனிதர்கள் மேலே பார்த்துக் கொண்டிருப்பதைப்போல **"மண்டூகம்"** எனப்படும் தவளைகளும் மேலே தான் பார்த்துக் கொண்டிருக்கும். தாமரை இலைகளின் மீதும் மலரின் மீதும் தாவிக் குதிக்கும். பட்டினிகிடக்கும். பாம்புக்கு இரையாகும். பலனேதும் கண்டதில்லை.

வடலூரைத் தன்னகத்தே கொண்ட தமிழ்நாட்டில் நாம் பிறந்திருந்தும், அருட்பாவென்னும் தாமரையில் ஜீவகாருண்ய மென்னும் தேன் ஊறுவது தெரியவில்லை. பாடல்கள் மட்டுமல்ல, மருத்துவம், விண்ணப்பம், உபதேசம், ஒழுக்கம் போன்ற உரைநடைப் பகுதிகளும் அதில் உள்ளன. அண்மையில் விவேகானந்தரின் 150-வது பிறந்தநாள் விழா நிறைவுற்றது. அவர் பிறந்தது வங்க தேசமென்றாலும், தமிழ்நாட்டில் அவருக்கு 46 நினைவுச் சின்னங்கள் உள்ளன. இராமகிருஷ்ண மடங்களும் பல உள்ளன. இவைகளையெல்லாம் 1904-ல் இராமகிருஷ்ணரின் நேரடி சீடரான சசி மகாராஜ் (வங்கத்தில் பிறந்தவர்) சென்னை வந்தபின் முயற்சித்து நிறுவினார். 82 வயது வரை அவர் வாழ்ந்தார். அன்னாரது உணவில் தூதுவளை, கரிசலாங்கண்ணி, முசுமுசுக்கை என்னும் தமிழ்நாட்டு ஞான மூலிகைகள் ஆக்கிரமித்துக் கொண்டன. இது எதைக் காட்டுகிறது? வள்ளலார் 1874-க்கு முன்பு சொன்ன ஞான மூலிகைகளை 1904-ல் வந்த வங்கதேசத்து சசி மகாராஜ் பின்பற்றியிருக்கிறார். அவரல்லவா தேனீ ! ஞானமூலிகை என்பது என்ன? அதன் பலன் என்ன என்று தெரியாமல் நம்மில் பலர் தடாகத்துத் தவளைகளாய் இருக்கிறோம். தீப நெறியின் கோட்பாடுகளில் ஒன்றான நோயில்லா உலகம் உருவாக்க நாம் என்ன செய்கிறோம்? உருவாக்க வேண்டுமென உறுதியுள்ளவர்கள் இது தொடங்கிய தினமும் தூதுவளை, கரிசலாங்கண்ணி, முசுமுசுக்கை பொடியை சிறிதளவு தினமும் உண்ணத் தொடங்குங்கள். எல்லா ஊர்களிலும் நாட்டு மருந்துக் கடை, காதி விற்பனை கடைகளில் இவை கிடைக்கும். தீப அறக்கட்டளையினரும் எதிர்வரும் மாதத்திலிருந்து இம்மூலிகையை லாபம் வியாபார நோக்கமின்றி அறக்கட்டளை வளாகத்திலும் அருகிலுள்ள கடைகளிலும் இதை விற்பனை செய்வர். குறிப்பாக 35 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதை தினமும் பயன்படுத்தி வந்தால் இப்போது செலவழிக்கும் மருத்துவச் செலவில் பத்தில் ஒரு பங்கு கூட செலவழியாது. நோயில்லா உலகம் நோக்கி நடைபோடுங்கள். மனிதனின் மரணத்தை நிச்சயிப்பது இறைவன். எழுதிய எழுத்து என்பது மூடநம்பிக்கை. மனிதனாகத்தான் மரணத்தை வரவழைக்கிறான். இதே மனிதன் நினைத்தால் அவன் வாழ்நாளை நீட்டித்துக்கொள்ள மரணமில்லா பெருவாழ்வில் வாழ முடியும். மரணத்தை தள்ளிப்போடவும், விரட்டவும் முடியும்.

தடாகத் தவளைகள் நாடும் அழுக்கைப் போன்றதே நாம் நாடும் ஆண்ட்டிபயாடிக்ஸ். தவளையின் உடலெங்கும் பாசி; நம் உடலெங்கும் ஊசி. இதை விடுத்து தேனீக்கு நிகராய் இந்த ஜீவாம்ருத மூலிகைகளை உண்ணத் தொடங்குங்கள். உன்னதமான நோயில்லா வாழ்க்கையை, நோயற்ற வாழ்வில் நான் வாழ வேண்டுமென வள்ளலார் எழுதியதை செயலாக்குங்கள்!



**K.N. உமாபதி**
K.K. நகர், சென்னை
95518 49757

**சத்தியம் சத்தியம் சத்தியம் எனவே**
**இத்தகை வழுத்தும் என்தனிச் சத்தே (1210)**

# கல்விச் சேவையில் 10-ம் ஆண்டில்

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டையின் சார்பில் ஆண்டுதோறும் கல்வி உதவியாக இதுவரை 972 ஏழை எளிய மாணவச்செல்வங்களுக்கு ₹ 52,63,868 /- க்கும் (1/2 கோடி) மேலாக கல்வி உதவித்தொகை வழங்கி உள்ளது.

## ஓர் ஏழை மாணவனின் கல்விக்கு உதவிட வேண்டுமா?

தற்போது 2019-20-ம் கல்வி ஆண்டிற்கு தமிழகம் முழுவதும் இருந்து படிப்பில் நன்றாக தேர்ச்சி பெற்ற 135 கிராமப்புற ஏழை-எளிய மாணவச்செல்வங்கள் விண்ணப்பித்துள்ளனர். அதில் முதல் கட்டமாக கடந்த 16.06.2019 ஞாயிறன்று 92 மாணவச் செல்வங்களுக்கு ₹4,49,950 /- கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டது. மேலும் 40 மேற்பட்ட மாணவர்கள் காத்திருப்பு பட்டியலில் உள்ளனர். 40 ஏழை மாணவர்களும் மிகவும் வறுமையில் வாடுபவர்கள். அவர்களில் ஒருவரை தங்கள் பிள்ளைகளாக பாவித்து அவர்களின் எதிர்கால வாழவாதாரத்தை கருத்தில் கொண்டு கருணை(கல்வி)நிதியை வாரி வழங்கிட வேண்டுமாய் தங்களை அன்புடன் வேண்டி விண்ணப்பிக்கின்றோம்.

~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

Donations may be sent by crossed cheque to :

**Deepam Trust**

No. 30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

**For Bank Transfer**

**State Bank of India, IIT Branch, DEEPAM TRUST**

**Current A/c. No. : 30265475129 / IFSC Code : SBIN0001055**




**கல்லாதோர் இல்லா பாரதம் படைப்போம்**
**கற்றோர் நெஞ்சம் நிமிரச் செய்வோம்**

இங்ஙனம்
**நிர்வாகிகள்** மற்றும் **அறங்காவலர்கள்**
**தீபம் அறக்கட்டளை.**

**துரியமும் கடந்ததோர் பெரியவான் பொருள்என**
**உரைசெய் வேதங்கள் உன்னும் மெய்சத்தே (1212)**
~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~~

## தருமச்சாலையை தோற்றுவித்தார் வள்ளலார்....

25-5-1867 ஆம் நாள் வடலூரில் வள்ளலார் முதன் முதலில் தருமச்சாலையைத் தோற்றுவித்தார். தருமச்சாலை ஏன் தோற்றுவித்தார்? உலகில் உள்ள எல்லவரும் இறைவனால் படைக்கப் பட்டவர்கள். மனிதர்களைத் தவிர இறைவனால் படைக்கப்பட்ட எல்லா ஜீவராசிகளுக்கும் நியதி ஆகாரம் இறைவனால் வழங்கப்படுகின்றது. நம்மை போன்ற உயர்ந்த அறிவு பெற்ற மனிதர்களுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட நியதி ஆகாரம் கிடையாது. ஆகாமிய ஆகாரமான முயற்சி ஆகாரம் பெற்று தான் உயிர் வாழ வேண்டும் என்பது இறைவன் ஆணையாகும். அந்த முயற்சி ஆகாரம் கிடைக்காமல் மக்கள் மாண்டுபோகிறார்கள். அவர்களைக் காப்பாற்றுவதே, பொருள் இருக்கப்பட்டவர்களின் கடமையாகும்.

பொருள் உள்ளவர்கள் பொருள் இல்லாதவர்கள் என்ற நிலை உலகில் இறைவன் சட்டத்தை மீறி நடந்து கொண்டு உள்ளன. அதை ஒழித்து ஒத்தாரும், உயர்ந்தோரும், தாழ்ந்தாரும் ஒருமை உளராகி உலகியல் நடத்த வேண்டும் என்பது இறைவன் ஆணையாகும். உள்ளவர்கள் இல்லாதவர்கள் உள்ளதால் தான் ஏழைகள் உருவானார்கள். இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு கொடுப்பதே ஜீவகாருண்யம். அதுவே ஒவ்வொரு மனித ஆன்மாக்களின் கடமையாகும்.

இறைவன் கட்டளைப்படி உலகில் பசியோடு எவ்வுயிரும் மற்றும் மனிதர்கள் இருக்கக்கூடாது என்பது இறைவன் சட்ட நியதியாகும். **"பசியோடு இருப்பவர்கள் எல்லோரும் ஏழைகள்தான்."** எனவே தான் பசித்த ஏழைகளுக்கு உணவு அளிப்பதே மனிதர்களின் முதல் பணியாகும் என்பதால் இறைவன் ஆணைப்படி வடலூரில் சத்திய தருமச்சாலையை தோற்றுவித்தார் வள்ளலார். இதற்கு ஜீவகாருண்யம் என்றும், ஜீவகாருண்ய ஒழுக்கம் என்றும் பெயர் வைத்தார்.

கடவுள் அருளைப் பெறுவதற்கும், கடவுளைத் தொடர்பு கொள்வதற்கும், கடவுள் யார் என்பதை தெரிந்து கொள்வதற்கும் ஒரே வழி ஜீவகாருண்ய ஒழுக்கம் மட்டுமே என்பதை உலக மக்கள் தெரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காகவே சத்திய தருமச்சாலையை வடலூரில் தோற்றுவித்து சாலை என்னும் வழியைக் காட்டுகின்றார். மேலும் ஜீவகாருண்யம் இல்லாமல் செய்யப்படுகின்ற, தவம், தியானம், யோகம், புறவழிபாடுகள் எல்லாம் வெற்று மாயா ஜாலங்களே என்னும் உண்மையை மக்களுக்குத் தெரிவிக்கின்றார்.

வள்ளாருக்கு ஆண்டவர் காட்டிய உண்மை வழிகளை, பாடல்கள் மூலமும், உரைநடைகள் மூலமும் வள்ளலார் மக்களுக்குத் தெரியப்படுத்துகின்றார். ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற தலைப்பில் மூன்று பிரிவுகளாக வசன பாகத்தில் எழுதி வைத்துள்ளார். மேலும் பாடல்களிலே தெளிவுப்படுத்தி உள்ளார். அதிலே சில பாடல்களை பதிவு செய்கிறேன்.

**என்பாட்டுக் கென்னாத தென்னி இசைத்தேன் என்**
**தன் பாட்டைச் சத்தியமாத் தான்புனைந்தான் –**
**முன்பாட்டுக்**
**காலையிலே வந்து கருணைஅளித்தே தருமச்**
**சாலையிலே வா என்றான் தான்!**

ஏதும் தெரியாது என்பாட்டுக்கு ஏதோ பாடிக்கொண்டும், எழுதிக்கொண்டும் வழிபட்டுக் கொண்டும் இருந்த என்னை தருமச்சாலை வழியாகத்தான் வரவேண்டும் என கட்டளை இட்டார் இறைவன் என்பதை மேலே கண்ட பாடல் மூலம் தெரியப்படுத்துகின்றார் வள்ளலார். மேலும் கீழே வரும் பாடலை கவனிக்கவும்.

**காலையிலே என்றனக்கே கிடைத்த பெரும் பொருளே**
**களிப்பே என் கருத்தகத்தே கனிந்த நறுங் கனியே**
**மேலையிலே இம்மையிலே ஒருமையிலே தவத்தால்**
**மேவுகின்ற பெரும்பயனாம் விளைவைஎலாம் தருமச்**
**சாலையிலே ஒருபகலில் தந்த தனிப் பதியே!**
**சமரச சன்மார்க்கத் தலை அமர்ந்த நிதியே**
**மாலையிலே சிறந்த மொழிமாலை அணிந்து ஆடும்**
**மாநடத்து என் அரசே என் மாலையும் ஏற்று அருளே!**

அதாவது,

**இம்மை இன்ப வாழ்வு.**
**மறுமை இன்ப வாழ்வு,**
**பேரின்ப வாழ்வு**

போன்ற முத்தேக சித்தி பெறும் வல்லபம் முழுவதும் அந்த பெரும் பயனாம் விளைவை எல்லாம், ஒரே ஒரு பகலில் தருமச்சாலை வழியாக இறைவன் அருளைப் பெற்றுக் கொண்டேன் என்கிறார் வள்ளலார்.

அதே நேரத்தில் உலகில் எவ்வளவோ அருளாளர்கள் பாமாலைகள் தொடுத்து இருந்தாலும், என் பாமாலைகளை சிறந்த மொழி மாலைகள் என்று ஏற்றுக் கொண்டாய் என்னே என்மேல் உங்கள் கருணை என்று.. உண்மை இறைவன் அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் போற்றி புகழ்கின்றார்.

மேலும் காலையிலே நின்றன்னைக் கண்டு கொண்டேன் சன்மார்க்கச் சாலையிலே இன்பம் தழைக்கின்றேன் – ஞாலமிசைச் சாகா வரம்பெற்றேன் தத்துவத்தின் மேல் நடிக்கும் ஏகா நினக்கடிமை ஏற்று! என்றும், காலையிலே அமுதக்காற்றை அருந்தி

நின்தன்னை கண்டு கொண்டேன் தருமச்சாலையிலே இன்பம் பெறுகின்றேன். மேலும் சாகா வரமும் பெற்றுக் கொண்டேன். தத்துவங்களை எல்லாம் கடந்து, தத்துவத்தின் மேல் நடிக்கும் எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே, ஏகனே, அனேகனே என்னையும் உமக்கு அடிமையாக ஏற்றுக் கொள்வாய், ஏற்றுக் கொண்டாய் என்று போற்றி புகழ்கின்றார். மேலும்,

**மாலையிலே உலகியலார் மகிழ்நரொடு கலத்தல்**
**வழக்கம்அது கண்டனம்நீ மணவாள ருடனே**
**காலையிலே கலப்பதற்கு இங்கு எனைப் புறம்போ என்றாய்**
**கண்டிலன் ஈ ததிசயம் என்றுரையேல் என் தோழி**
**ஓலையிலே பொறித்ததனை நீ உன்னுளத்தே கருதி**
**உழல்கின்றாய் ஆதலில்இவ் வுளவறியாய் தருமச்**
**சாலையிலே சமரசசன் மார்க்கசங்கந் தனிலே**
**சற்றிருந்தாய் எனில்இதனை உற்றுணர்வாய் காணே!**

ஆண் பெண் உலகில் உறவு கொள்வது மாலை நேர வழக்கம் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் இங்கு ஓர் அதிசயம் நிகழ்கின்றது.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்னை கலப்பதற்கு காலையிலே வருகின்றார். உலகில் தோன்றிய அருளாளர்கள் இரவில் தான் கலப்பதாக ஓலையிலே எழுதி வைத்துள்ளார்கள். அது உண்மை என்று படித்து, பிடித்து உளரிக் கொண்டு உள்ளீர்கள். ஆண்டவரின் உளவைத் தெரிந்து கொள்வார் உலகில் ஒருவரும் இல்லை. நான் தோற்றுவித்த சத்திய தருமச்சாலையிலும், சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்திலும் இருந்து ஜீவகாருண்ய ஒழுக்கத்தை கடைபிடித்தால் அந்த உளவை அறிவால் அறிந்து கொள்வீர்கள் என்கிறார். எனவே இறைவன் அருளைப் பெறுவதற்கு சத்திய தருமச்சாலை வழிதான் உளவு என்பதை வெளிச்சம் போட்டு காட்டுகின்றார் வள்ளலார்.

ஜீவகாருண்யம் இல்லாத போது அருள் விளக்கம் தோன்றாது. அது தோன்றாதபோது கடவுள் நிலை கைகூடாது. அது கூடாத போது முத்தி இன்பம், சித்தி இன்பம் ஒருவரும் பெறமாட்டார்கள். அடையாத பட்சத்தில் பரலோக ஒழுக்கம் வழங்கவே மாட்டாது என்பதை அறிய வேண்டும் என்று ஜீவகாருண்ய ஒழுக்கத்தில் பதிவு செய்கிறார் வள்ளலார்.

ஜீவகாருண்யத்தால் மட்டுமே மோட்ச வீட்டின் கதவைத் திறக்க திறவுகோல் என்னும் சாவியைப் பெறமுடியும் என்கிறார்.மேலும் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்பதை ஆணித்தரமாக பதிவு செய்கிறார்.

வள்ளலார் ஆரம்ப காலத்தில் பக்தி மார்க்கத்தை கடைப்பிடித்து வந்தார். அந்த மார்க்கத்தால் இறைவன் அருளை முழுமையாக பெற முடியாது. முடியவில்லை என்பதை உணர்ந்த வள்ளலார் ஞான மார்க்கத்தை தோற்றுவித்தார்.

ஞான மார்க்கம் என்பதுதான் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் என்பதாகும். இந்த மார்க்கத்தின் முதல்படி, முதல் பயிற்சி என்பது ஞானசரியை என்பதாகும்.

**ஞானசரியை என்பது இந்திரிய ஒழுக்கம் என்பதாகும்.**
**ஞான கிரியை என்பது கரண ஒழுக்கம் என்பதாகும்.**
**ஞான யோகம் என்பது ஜீவ ஒழுக்கம் என்பதாகும்.**
**ஞானத்தில் ஞானம் என்பது ஆன்ம ஒழுக்கம் என்பதாகும்.**

மனித உயிரான ஜீவனை மனித உடம்பில் இருந்து வெளியேற்றாமல் காப்பாற்றுவதே ஜீவகாருண்ய ஒழுக்கமாகும். எனவேதான் வள்ளலார் ஜீவனைக் காப்பாற்றும் முதற் கருவியான பசிப் பிணியைப் போக்க சத்திய தருமச்சாலையை வடலூரில் தோற்றுவித்து உள்ளார்.

பசிப்பிணியைப் போக்க வள்ளலார் மூட்டிய அடுப்பு அன்று முதல் இன்று வரை அணையாமல் பசிப்பிணியைப் போக்கிக் கொண்டு வருகின்றது. இன்று உலகம் முழுவதும் மக்கள் வள்ளலார் கொள்கையை சிரமேற்க் கொண்டு ஏழைகளின் பசிப்பிணியை போக்கிக் கொண்டு வருகிறார்கள்.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் பசிப்பிணியைப் போக்கிக் கொண்டு வருகிறார்கள் என்பதை அறியும்போது, காணும் போது அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன்.

சாதி, சமயம், மதம் என்ற பிரிவினை இல்லாமல் அன்பு, தயவு, இரக்கம், கருணை, அருள் பெறுவதற்கும் மக்களை நல்வழிப்படுத்துவதற்கும் ஜீவகாருண்யம் ஒன்றே, வள்ளலார் காட்டிய சிறந்த வழியாகும்.

இன்று உலகம் முழுவதும் உள்ள அறிவு சார்ந்த மக்கள் உண்மையைத் தெரிந்து புரிந்து அறிந்து கொண்டு ஜீவகாருண்ய பணியைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகிறார்கள். மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

இனி சுத்த சன்மார்க்கம் ஒன்றே எக்காலத்தும் விளங்கி ஓங்கி உயர்ந்து நிற்கும் மார்க்கமாகும்.

**எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!**
**கொல்லா நெறியே உலகம் எல்லாம் ஓங்குக!**



அன்புடன் ஆன்மநேயன்
**ஈரோடு கதிர்வேல்**
+91 9865939896

**என்றும் உள்ளதுவாய் எங்கும் ஓர் நிறைவாய்**
**என்றும் விளங்கிடும் என்தனிச் சித்தே (1216)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் பம்மலை சேர்ந்த ஆதரவற்ற 30 வயது சேகர் என்பவருக்கு டயாலிஸிஸ் மருத்துவ சிகிச்சைக்காக கடந்த 6 ஆண்டுகளுக்கும் மேலாக மாதந்தோறும் ₹ 5,000/- வழுங்கப்படும் காட்சி**



சென்னை வேளச்சேரி

## தீபம் அறக்கட்டளையின்
## வடலூர் சத்திய தருமச்சாலை சேவைப் பயணம்

**தொடர்ந்து 70 மாதங்களாக...**

அன்பார்ந்த ஆன்மநேய உடன்பிறப்புக்களே!

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் வடலூர் சத்திய தீப தருமச்சாலையில் மாதந்தோறும் ஜோதி (பூசம்) தரிசன நாளில் காய்கறி வெட்டுவதற்கும், சமையல் பணிக்கும் தீபத்தின் ஆடுகின்ற சேவடிகள் பங்கு பெறுகிறார்கள். வருகின்ற 04.07.2019 வியாழக்கிழமை ஜோதி தரிசன நாளில் 70 வது மாத சேவைப்பயணம் நடைபெறுகிறது. அதுசமயம் 03.07.2019 புதன் இரவு சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலையில் இருந்து **வேன்** புறப்படுகிறது. இலவச சேவைப்பயணம். அனைவரும் பங்கு பெற்று ஆன்மலாபம் அடைந்து இன்புற்று வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

**01.07.2019க்குள் முன்பதிவு அவசியம் கட்டணம் இல்லை**

மாத பூச நாள்
**04.07.2019 (வியாழன்)**

வேன் புறப்படும் இடம்
**நித்ய தீப தருமச்சாலை**
வேளச்சேரி, சென்னை - 42.

புறப்படும் நாள் & நேரம்
**03.07.2019 / இரவு 9 மணி**

தொடர்புக்கு
ஆன்மநேயன் V. **பாரதி,** பொதுச்செயலாளர்
தீபம் அறக்கட்டளை, வேளச்சேரி, சென்னை - 600 042.
கைப்பேசி : 99410 35743 / 044-2244 2515

**சத்திகள் பலவாய் சத்தர்கள் பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சத்தே (1218)**

## சென்னை வேளச்சேரி நித்ய தீப தருமச்சாலை மற்றும் நடமாடும் அன்ன தருமச்சாலையில் தினசரி நடைபெறும் பசியாற்றுவித்தலின் அற்புத காட்சி



ஜீவகாருண்யமே மோட்ச வீட்டின் திறவுகோல்



தத்துவங்கள் பலவாய் தத்துவி பலவாய்
இத்தகை விளங்கும் என்தனிச் சித்தே (1220)









## நீரின்றி அமையாது உலகு !

தமிழகத்தில் சில இடங்களில் தற்போது நிலவி வரும் பெரும் பிரச்சனையான, மனிதர்களின் வாழ்வாதரத்திற்கு மிக முக்கிய அத்தியாவசிய தேவையான நீராதாரம் மிகவும் தலைவிரித்தாடுகிறது. கடந்த சில ஆண்டுகளாக தென்மேற்கு பருவமழையும், வடகிழக்கு பருவமழையும் பொய்த்துவிட்டதாலும், கோடைகாலத்தில் வெயிலில் தாக்கம் மிக அதிகமாக இருப்பதாலும், நீர்நிலைகளை நாம் சரியாக பராமரிக்காத காரணத்தாலும், தற்போது நீரின்றி பெரும்பாலான இடங்கள் வறட்சியின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கின்றன. தமிழ்நாட்டில் கோடைகால கட்டத்தில் மிக அதிகமாக வேலூர் மற்றும் திருத்தணியில் தான் அதிகளவில் வெப்பம் ஏற்படுவது இயற்கை.

வேலூர் மாவட்டம், அரக்கோணம் தாலுகா, பனப்பாக்கம் அருகே உள்ள சிறுவளையம் கிராமத்திலும் கடுமையான வெயிலில் ஏரிகளும் குளங்களும், கிணறுகளும் வறண்டு நீரின்றி மக்கள் அவதிப்பட்டனர். சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையானது சிறுவளையம் கிராம மக்களின் தாகம் தணிக்க உடனடியாக காஞ்சிபுரத்தில் இருந்து போர்வெல் வண்டி வரவழைக்கப்பட்டு 32,000/- செலுத்தி 185 அடிக்கு போர் போடப்பட்டு நீர் வரத் துவங்கியது கண்டு தீபம் மகிழ்ச்சி அடைந்தது. இந்த சமுதாயப் பணிக்கு நிதி தந்த தயவாளர்கள் வாழ்க!

ஒவ்வொரு ஆண்டும் பருவமழை பொய்த்து வரும் காலங்களில் நாமனைவரும் ஒன்றுபட்டு நீராதாரம் பெருக வேண்டிய முயற்சியில் ஈடுபட்டு ஏரி, குளம் போன்ற நீர்நிலைகளை தூர்வாரி நீரை சிக்கனமான முறையில் பயன்படுத்தி எதிர்கால சந்ததியினருக்கு வழிவகை செய்ய உறுதி ஏற்போம்.

**இங்ஙனம்**
**தீபம் அறக்கட்டளை**

**படி நிலை பலவாய்ப் பதநிலை பலவாய்**
**இடிவற விளக்கிடும் என்தனிச் சித்தே (1222)**

# தருமச் சாலை கட்டிட அருட்பணிக்கு கருணை நிதி வாரி வழங்குவீர்




| | |
|---|---|
| 1 சதுர அடி நிலத்துடன் கட்டிட திருப்பணி | 10,000/- |
| 10 சதுர அடி நிலத்துடன் கட்டிட திருப்பணி | 1,00,000/- |

**1 லட்சம் ரூபாய்க்கு மேல் நன்கொடை அளிப்பவர்களின் பெயர் கல்வெட்டில் பொறிக்கப்படும்.**

***for Bank Transfer***

Bank / Branch : State Bank of India / IIT Branch
Current A/c. No. : 30265475129
IFSC : SBIN0001055

***By Crossed Cheque***

**DEEPAM TRUST**

#30, Dropathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.
Mobile : 9444073635 | Phone : 044 - 22442515 | E-mail : admin@deepamtrust.org
Website : www.deepamtrust.org

**தாங்கள் அளிக்கின்ற நன்கொடைகளுக்கு 80G வருமானவரி விலக்கு உண்டு**

## தர்மம் தலை காக்கும் ! தக்க சமயத்தில் உயிர் காக்கும் !

என்ற அற்புதமான பொன்வரிகளுக்கு ஏற்ப தர்மம் செய்திடுவோர் அவர்களின் வருங்கால சந்ததியினரை காக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. தர்மமானது உண்மையான, சத்தியமான, நேர்மையான தமது சொந்த உழைப்பிலிருந்து வரக்கூடிய நிதியில் அளிப்பதாகவும். அப்படிப்பட்ட நிதியானது வறியவர்களின் பசிப்பிணியை போக்குவதற்கும், தர்ம சத்திரங்களை உருவாக்குவதற்கும் பயன்படுமானால், ஈரேழு ஜென்மத்தில் பீடித்திருக்கும் கர்மவினைகளும், பாவங்களும் நீக்கி பிறவி எனும் பெருங்கடலில் இருந்து கரையேறி இறைவனுடன் ஏக சொருபமாக இணைந்து மரணமில்லா பெருவாழ்வு பெற்று வாழ்வதற்கு முதல் படியாக அமையும்.

சித்தர்வாக்கு

**மூர்த்தர்கள் பலவாய் மூர்த்திகள் பலவாய்**
**ஏற்பட விளக்கிடும் என்தனிச் சித்தே (1224)**

# நித்ய தீப தருமச்சாலை

**கடந்த 12 - ஆண்டுகளாக, தினசரி நூற்றுக்கணக்கான**
**பசியால் வாடும் வறியவர்களுக்கு, 20 தருமச்சாலைகள் மூலம்**

## ஆயிரக்கணக்கானோருக்கு அன்னம்பாலிப்பு



**அன்னதான அறப்பணிக்கு அருட்கொடை தந்து நீங்களும் அருளின்பம் பெற அன்புடன் அழைக்கின்றோம்!**
**தங்கள் சக்திக்கேற்ப, விருப்பத்திற்கேற்ப அன்னம் தந்து மகிழலாம்!**

| | | | |
|---|---|---|---|
| காலையில் கஞ்சி வார்க்க | ரூ. 1,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 10,000/- |
| மதியம் உணவளிக்க | ரூ. 3,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 30,000/- |
| மதியம் சிறப்புணவு | ரூ. 5,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 50,000/- |
| ஒரு நாள் அன்னமளிக்க | ரூ. 6,000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ. 60,000/- |
| 20 தருமச் சாலைகளிலும் அன்னமளிக்க | ரூ.20, 000/- | இதற்கு வைப்பு நிதி | ரூ.2,00,000/- |

**முன்பதிவிற்கு தொடர்பு கொள்ளவும் : 044 - 2244 2515 / 94440 73635**

Donations may be sent by crossed cheque to:

**DEEPAM TRUST**

#30, Drowpathi Amman Koil Street, Velachery, Chennai - 600 042.

For Bank Transfer

Bank / Branch : State Bank of India / IIT Branch
Current A/c. No. : 30265475129
IFSC : SBIN0001055

**வங்கி பரிமாற்ற தகவலை 9444073635 என்ற எண்ணிற்கு அவசியம் தெரிவிக்கவும்.**

**உயிர்வகை பலவாய் உடல்வகை பலவாய்**
**இயலுற விளக்கிடும் என்தனிச் சித்தே (1226)**

# அருட்பெருஞ்சோதி அகவல்

அனுபவப் பொருள் விளக்கம்

திண்டுக்கல் சுவாமி சரவணானந்தா

## 37. சுட்டுதற்கரிய சுகாதீத வெளி

**73. சுட்டுதற் கரிதாஞ் சுகாதீத வெளியெனும்**
**74. அட்டமேற் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி**

(உ–வி.) முன். துரியாதீத நிலையே கடவுட்பெருநிலையாக விளம்பப்பட்டது. அந்நிலையில் உண்டாகின்ற சுகானுபவம் இப்படிபட்டது என்று சொல்லித் தெரிந்துகொள்ள முடியாதாம். இறையுறை பெருவெளிநிலை சுகாதீதவெளி எனப்பட்டுள்ளது. சுகத்திற்கு அமுதமானது சுகாதீதம். இது சுகத்திற்கு அப்பாற்பட்டதாம். சுகம் என்றால் இன்பமயமான அனுபவநிலை. கடவுள் அனுபவமோ ஒருவனுக்கு ஏகதேசம் விளங்கி மின்னல் போலத் தோன்றி மறைகின்றதால் அதன் நிறைவிளக்கத்தைப் பிறர் அறியவொண்ணாது என்பர். ஆகவேதான் கடவுள் நிலையைச் சுகாதீதம் என்றனர். அது சுட்டுதற்கு அரியது என்பதும் உண்மையே. இனிமேல் சன்மார்க்கியின்அனுபவத்தைக் காண்போம்.

சுட்டுதற்கரிதாம் சுகாதீத வெளியில் இயல்பாகவே, உண்மையை அறியாமலே உறைகின்றவன் மனிதன். இவ்வுண்மையை அறிகின்றவன் சன்மார்க்க பரிபாகம் அடைந்தவன் ஆவான். இவன் அருட்பூரண அனுபவம் கொண்டு இறை வண்ணமாய் இலங்கவல்லவன். அல்லது இறைவனே இப்பூரணனின் அருள் ஒளிவடிவினின்று திகழ்கின்றவனாகின்றான் எனலாம். இதனால் இறைவன் ஒருவனே எங்கும் பூரணமாய் இருந்து கொண்டும், சுத்த சன்மார்க்கியின் அனுபவத்தில் வெளிப்பட்டு அவனேயாகவும் விளங்குகின்றான் என்பதும் உண்மையாம். ஆகவே இம்மார்க்க நிறைமனிதன் தானே கடவுள்மயமாய் அக அனகநிறைவு கொண்டிருப்பதோடு, மற்ற ஒவ்வொருவரின் அகஅனக நிறைவு கொண்டும் விளங்குகின்றானாம். இது அவனது பேரின்ப அனுபவ நிலையாம். இதனால் இவனுடைய சுகானுபவம் சுகாதீதம் என்று சொல்லப்பட்டது. சுகாதீதம் என்றதை அததசுகம் என்று அனுவயப்படுத்திக் கொள்ள வேண்டும். அதீதசுகம் என்றால், மேலான, அப்பாலான சுகம் என்று பொருள்படும். இதனையும் சுட்டுதற்கரியதாய்க் கொள்ளுதல் பொருத்தமே.

மேற்படி அதீதசுகம்தான் இப்பொழுது நம் அருட்பெருஞ்ஜோதி சிற்சபையில் வெளியாகியுள்ளதாம். இச் சிற்சபையை எட்டிடவே முடியாது. புறத்திருந்து இச்சபையை அடைய உயர்நிலைக்கு ஏறிச் செல்லச்செல்ல மேலும்மேலும் எட்டாது உயரத்திலேயே தோன்றிக் கொண்டிருக்குமாம். புற வான்வெளியின் முடிவேகூட எட்டப்படுவதாயில்லையே! இப்படித்தான் நமது அருட்சிற்சபையும் தீண்டரிய வெளியில் திகழ்கின்றது உண்மையாம். இப்படி உயர்வற உயர்ந்த மேனிலையிலுள்ளது இச் சிற்சபை என்ற குறிப்பை உணர்த்தவே அட்டமேற் சிற்சபை, என்று அணிந்து கூறியுள்ளார் நமது அருள் அண்ணலார். அட்டம் என்றாலே, மேல் என்று பொருள்படும். மேல் என்பதற்குமுன் அதே பொருள் கொண்ட பிறிதொரு சொல்லையும் கூட்டி உரைக்கப்பட்டதால், மேனிலைக்கு மேனிலையாய், மிக மேலான நிலையாய் உணர்த்தப்படுகின்றோம். இவ்வகைச் சொல்லே மீமிசைச் சொல் என்பது இலக்கண வழக்கு.

இப்படி எவ்வகையிலும் எட்டரிய மேலான நிலையிலிருக்கும் அருட்பெருஞ்ஜோதி சிற்சபையை, நம் வள்ளல் அருட்பூரணத்தால் அடைந்து, பெருஞ்சுகத்தையும் அனுபவிக்கின்றார் என்றால் அது உண்மையே. இவருடைய அனுபவவழி, புறத்திருந்து அடையப்பட்டதல்ல. இயற்கையிலேயே அம்மேனிலையிலுள்ள சிற்றம்பலத்திலேயே, தான் பதியோடிருப்பதைக் கண்டு நிற்கின்றதுதான் உண்மை. எட்டாத மேனிலை அம்பலத்தே இருந்து கொண்டுதான் ஆனந்தநடனமாகிய ஐந்தொழிற் செயலால் உலகெலாம் விளங்கச் செய்து கொண்டுள்ளார் நம்பதி. நிறை அருளால் சன்மார்க்கியும் இறைமயமாகி வாழ்கின்றபோது நித்தியானந்தமாகவே விளங்குகின்றான். ஆண்டவரின் ஐந்தொழிற் செயல் எங்கும் நடந்துகொண்டே இருப்பதையும் கண்டு நிரதிசயானந்தமாய் வாழ்கின்றான் இம்மார்க்கி. எனவே இங்கு குறித்த மேலான நிறை இன்ப மேல்சபை வாழ்வுக்கு நிகர் உலகில் வேறு இல்லையாம்.

**அறிவவை பலவாய் அறிவன பலவாய்**
**எறிவற விளக்கிடும் என்தனிச் சித்தே (1228)**

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் 2019 - 20-ம் ஆண்டிற்கான 10-ம் ஆண்டு கிராமப்புற 92 ஏழை எளிய மாணவச் செல்வங்களுக்கு முதல்கட்டமாக ₹ 4,49,450/- கல்வி உதவித்தொகை வழங்கப்பட்ட காட்சி

















**நினைவவை பலவாய் நினைவன பலவாய்**
**இனைவற விளக்கிடும் என்தனிச் சித்தே (1230)**

**சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் 2019 - 20-ம் ஆண்டிற்கான 10-ம் ஆண்டு கிராமப்புற 92 ஏழை எளிய மாணவச் செல்வங்களுக்கு முதல்கட்டமாக ₹ 4,49,450/- கல்வி உதவித்தொகை வழங்கப்பட்ட காட்சி**









# நன்றி ! நன்றி !! நன்றி !!!

சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் 2019 & 2020 கல்வி ஆண்டிற்கான 10 -ம் ஆண்டு கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவில் கடந்த 16.06.2019 அன்று கிராமப்புற 92 ஏழை எளிய மாணவர்களுக்கு முதல் கட்டமாக **₹4,49,450/-** கல்வி உதவித்தொகையாக வழங்கப்பட்டது. இந்த நிகழ்விலே தலைமை தாங்கி கலந்துக் கொண்ட மருத்துவர் செந்தில்நாதன் அய்யா அவர்கள் தனிப்பட்ட முறையில் தலா 500/- வீதம் 90 மாணவர்களுக்கான கல்வி உதவியை கவரில் வைத்து மொத்தமாக **₹45.000 /-** வழங்கியது மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. **மருத்துவர் செந்தில்நாதன்** அவர்களுக்கும், கல்விக்கான கருணை நிதியை வாரி வழங்கிய 40 க்கும் மேற்பட்ட தயவாளர்களுக்கும் தீபம் அறக்கட்டளை தனது நெஞ்சம் நிறைந்த நன்றியினை காணிக்கையாக்குகிறது.

**காட்சிகள் பலவாய் காண்பன பலவாய்**
**ஏட்சியின் விளக்கிடும் என்தனிச் சித்தே (1232)**

# அறியொணாப் பொருள்

மனிதனுக்கு அறிவு வழங்கினாய். ஆனால், உன்னை முழுமையாக அறிந்திடும் அறிவையும், ஆற்றலையும் மனிதன் இன்னும் பெறவில்லையே! மனிதன் முழுத்தகுதி பெறவில்லை என்பதா உனது மதிப்பீடு? அதனால்தான் நீ இன்னமும் அறியொணாப் பொருளாகவே இருக்கிறாயோ? குழப்பத்தில் உழலும் என்னைத் தெளிவிக்க, உன்னிடம் விண்ணப்பிக்கிற சிந்தனைப் பயிற்சிதான் இந்தக் கட்டுரை.

சுமார் எண்ணாயிரம் ஆண்டுகட்கு முன்னர். மனிதனுக்கு முதன்முதலாக கடவுள் – இறைவன் – பேரியக்க பெருஞ்சக்தி – என்கிற உணர்வு ஏற்பட்டிருக்கும் என்று பல ஆதாரங்களை எடுத்துச் சொல்லி ஆய்வாளர்கள் அறிவித்துள்ளார்கள். அன்றைய மனிதன், உன்னை உணர்ந்து கொண்ட அளவிலும் நீ உணர்த்திய விதத்திலும், உன்னை அறிமுகப்படுத்த, உன்னை அடையாளப்படுத்த தொடர்ந்து முயற்சித்துக் கொண்டே இருக்கிறான்.

உணர்வுகளை எண்ணங்களாக்கி, எண்ணங்களை வெளிப்படுத்த ஒலிகளை எழச் செய்து, எழுத்தாக்கி, மொழியாக்கி, மனிதனின் மன வளத்தை மேம்படுத்த, ஆறாவது அறிவை எண்ணுந்திறனைக் கொடுத்து, தொடர்ந்து அதனைப் பெருக்கிடும் ஆற்றலையும் வழங்கியுள்ளாய் உண்மை. நீ பரிபூரணன், அண்டத்தில் இருக்கிறாய், அணுவிலும் இருக்கிறாய், ஆதியும், அந்தமும் இல்லாதவன், அருவாய் இருக்கிறாய், உருவாகவும் உள்ளாய், என்னிலும் இருக்கிறாய் எனும் நம்பிக்கையோடு உன்னை வினவுகிறேன்.

மனிதனைப் படைத்த நோக்கம்? மனிதனின் இலக்கு? இறையுணர்வு மனிதனுக்கு ஏற்பட்ட காலத்தினின்று, தொடர்ச்சியாக, பல்லாயிரம் ஆண்டுகளாக, இறைத்தூதர்கள், உன்னால் அனுப்பப்பட்டவர்கள், ஓதாமல் உணர்ந்தவர்கள் பல்வேறு பிரதேசங்களிலிருந்து, பல்வேறு மொழிகள் மூலமாக, மனிதனை மாமனிதனாக்கிடத் தானே முயன்றார்கள். முயல்கிறார்கள்.

வேத வியாஸர் தொடங்கி வள்ளலார் வரை அனைவரும் உன்னால் அனுப்பப்பட்டவர்கள் தானே! மோஸஸ், மகாவீரர், கௌதம புத்தர், ஏசு, முகம்மது நபி, குருநானக், தொடர்ச்சியாக ஆதிசங்கரர், ஆழ்வார்கள், இராமானுஜர், நாயன்மார்கள், இராமகிருஷ்ணர், இராகவேந்திரர், கபீர்தாஸ், ஷீரடி சாய்பாபா, இரமணர், வள்ளலார், தாயுமானவர், மற்றும் சித்தர் பெருமக்கள், இவர்கள் யாவரும் உனது கட்டளைகளைத் தானே நிறைவேற்றினார்கள்.

இவ்வளவு போதனைகளும், இத்தனை ஞானிகளின் உழைப்பும் மனிதனை மாமனிதனாக உயர்த்தவில்லையே! ஏன்? என்ன நேர்ந்தது? எது தடையாக அமைந்தது? உன்னதமான மனம் உடைய உயர்ந்த மனிதர்கள் எண்ணிக்கை பெருகியிருக்க வேண்டுமல்லவா? எனது குழப்பத்தினூடே கிடைக்கின்ற விடைகளையும் சமர்ப்பிக்கின்றேன். சரி பார்த்து என்னை செப்பனிடுமாறு இறைஞ்சுகிறேன்.

புராதன காலம் – வேத காலம் – தேவாசுரப் போர்!! ஏன்? அன்று ஆரம்பித்த போர் இன்றும் தொடர்கிற அவலம்! இராம – இராவணப் போர், கிருஷ்ணர் காலத்தில் பாரதப் போர், பதினெட்டு அக்குரோணி சேனை அழிவு.

எகிப்திய நாகரிகம் உச்சகட்டத்தில் இருந்தபோதே, சுமார் 5000 ஆண்டுகட்கு முன்னர் உலக மக்கள் தொகை ஐந்து கோடி என்று சொல்கிறார்கள் ஆய்வாளர்கள். அதற்கு முன்னரே சேனைகளே பதினெட்டு அக்குரோணி இருந்ததென்றால் மக்கள் தொகை நமது பகுதியில் மட்டும் எவ்வளவு? இரத, கஜ, துரக, பதாதி படைகள் ஒருங்கிணைந்த ஒரு அக்குரோணி என்பது இப்போதைய எண்ணிக்கையில் ஒரு கோடி என்று கணக்கு சொல்கிறார்கள். கற்பனையான எண்ணிக்கை என்பதன்றி வேறென்ன?

அசுரர்கள், இராகிதர் என ஒரு வகுப்பினர் பற்றியும், அவர்கள் இயற்றிய தவம் பற்றியும், பெற்ற வரங்கள் பற்றியும், அஸ்திரங்களின் ஆற்றல் பற்றியும், அசுரர்களின் அக்ரமங்கள் பற்றியும், நீ அவதாரம் எடுத்து அவர்களை அழித்தது பற்றியும் பதினெட்டு புராணங்கள் பேசுகின்றன.

என்னுடைய குழப்பம் இங்கேதான் துவங்குகிறது. உனது படைப்பில் அசுரன் வரக் காரணம்? அசுர மனப்பாங்கை உன்னால் தவிர்த்திருக்க முடியாதா? பாரதப் போரையே தவிர்த்திருக்கலாமே! கீதா உபதேசத்திற்கு பின்பாவது அமைதி நிலவியதா? இல்லை. சமயப் போர்கள் – வாதப் போர்களாக துவங்கி அரசுகளிடையே, அரசர்களிடையே போர்களாக தொடர்கின்றன. ஒரு நூற்றாண்டு கூட, ஒரே ஒரு நாட்டில்

**செய்வினை பலவாய்ச் செய்வன பலவாய்**
**எய்வற விளக்கிடும் என்தனிச் சித்தே (1234)**

கூட சுபிக்ஷமும், அமைதியும் நிலைக்க-வில்லை.

உலக நாடுகள் அனைத்திலும் அமைதி இன்மைதான். மக்கள் அதிருப்தியால் பிரஞ்சு புரட்சி, ரஷ்யப் புரட்சி, இங்கிலாந்தில் போர், ஐரோப்பிய நாடுகளிடையே போர், நாடுகளை ஆக்ரமித்தல், அடிமைப்படுத்துதல், சீனாவில் போர், வடகொரிய – தென் கொரிய போர். முடிவே இல்லாமல் தொடர்கிறதே! வல்லரசுகள் அவசியத் தேவையல்ல. நல்லரசுகள் அமைந்தாலே போதும். போர்களே இல்லாத – போராட்டங்களே தேவைப்படாத நன்மக்கள் வாழ்ந்திடும், எல்லைப் பாதுகாப்பே இல்லாத நல்லரசுகள் அமைத்திட உன்னால் இயலாதா? மதங்களைப் போதித்த நல்லோர் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர் என அறிகிறோம். முனிவர்கள், அசுரர்களால் தாக்கப்பட்டனர், கௌதம புத்தர் வசைபாடி விரட்டப்பட்டார், ஏசுநாதர் சிலுவையில் அறையப்பட்டார். ஆதி சங்கரர் அச்சுறுத்தப்பட்டார். இராமானுஜர் கொலை மிரட்டலுக்கு உள்ளானார். வள்ளலார் மீது வழக்கு தொடரப்பட்டது. நல்லவர்களுக்கு ஏன் அச்சுறுத்தல் ? இன்னல்கள் ? பாரம்பரியம் பேசி பெருமிதம் கொள்வோர் நம்மில் பலர். அந்தக் காலத்தில் என்று ஆரம்பித்து பழங்காலத்தில் புனிதம் இருந்ததாக வாதிப்பர்.

மனிதன் அன்றும் அறிவிலியாகத்தான் இருந்தான். இன்றும் தீங்கிழைப்பவனாகவும், தீமைகளை அனுபவிப்பவனாகவும்தான் இருக்கிறான். காரணம்? மூட நம்பிக்கைகளை இறுகப் பற்றிக் கொண்டு அவநம்பிக்கைகளோடு வழிபாடுகள் செய்து தன்னம்பிக்கையை தாரை வார்த்துக் கொண்டிருக்கிறான். 10,000 கிடா வெட்டி தனது பக்தியைபறைசாற்றுகிறான். ( பத்திரிக்கை செய்தி ), அவனின்றி அணுவும் அசையாது என்று உறுதியாக நம்புவது உண்மையாயின், கோள்களின் நகர்வு மனிதனின் மன உணர்வுகளை, மகிழ்ச்சியை, துயரத்தை, நன்மைகளை, தீமைகளை நிர்ணயிக்கிறது என்று நம்பி தினப்பலன் அறிந்திட ஆசைப்படுவது ஏன்? எங்கோ தொலை தூரத்தில் எத்தனையோ ஒளி ஆண்டுகள் பயணிக்க வேண்டிய தூரத்தில் உள்ள கோள்களின் நகர்வுகள் இங்கே இருக்கும் மனிதனை ஆட்டுவிக்கும் என்றால், பூகம்பத்தாலும், சுனாமியாலும், தற்கொலை குண்டுவெடிப்புகளாலும், நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்படுகிறார்களே இவர்களுக்கெல்லாம் ஒரே நேரத்தில் மரணம் சம்பவிக்கும் என கோள்கள் நிர்ணயித்தனவா? கோளறு பதிகம் பாடச் சொன்னவனும் நீ, நாள் என் செயும் கோள் தான் என் செயும் என்று வினவச் சொன்னவனும் நீதானே! மனோதிடமின்றி ஜோதிடம் நாடுவோரை, தன்னை நம்பிடலும், உன்னை நம்பிடலும்தான் உகந்த செயல் என உணர்த்த மாட்டாயா? செயற்கை நுண்ணறிவு என்ற ஒரு புதுமையை சாதித்துவிட்ட மனிதன், இயற்கையான அறிவு மாந்தர் அனைவரிடமும் பெருகிட வைக்கும், பணியில் ஆர்வம் காட்ட மறுக்கிறானே! மூளைச்சலவை என்று பேசுகிறார்கள். சலவை என்றால் சுத்திகரித்தல், தூய்மைப்படுத்துதல் என்றுதானே பொருள் கொள்ளவேண்டும், அழிவுப் பணிகளுக்காக இளைஞர்களின் மூளை சலவை செய்யப்படுவதாக சொல்லப்படுகிறதே இவர்கட்கெல்லாம் இரக்க உணர்வை உன்னால் அளித்திட இயலாதா? என் அங்கலாய்ப்புகளை, குமுறல்களை இங்கே நிறுத்தி, சென்ற நூற்றாண்டின் உயர்ந்த மனிதர்கள் உரைத்தவற்றை, உணர்த்தியவைகளை சமர்ப்பிக்கின்றேன்.

**எய்வகைசார் மதங்களிலே பொய்வகை சாத்திரங்கள்**
**எடுத்துரைத்தே எமதுதெய்வம் எமதுதெய்வம் என்று**
**கைவகையே கதறுகின்றீர் தெய்வமொன்றென்று**
**அறியீர்கரிபிடித்துக் கலகமிட்டப் பெரியரினும் பெரியீர்**

**– வள்ளலார்**

**நான்யார் ? உன் உள்ளே தேடு !**
**இறைவனை அறியலாம்**

**– ரமணமகரிஷி**

**வேதநெறி ஆகமத்தின் நெறிபவுராணங்கள்**
**விளம்பு நெறி இதிகாசம் விதித்த நெறிமுழுதும்**
**ஓதுகின்ற சூதனைத்தும் உளவனைத்தும் காட்டி**
**உள்ளதனை உள்ளபடி உணர உணர்த்தினையே.**
**மதம் என்னும் சமயம் என்றும் சாத்திரங்கள் என்றும்**
**மன்னுகின்ற தேவரென்றும் மற்றவர்கள் வாழும்**
**பதம் என்றும் பதம்அடைந்த பக்தர் அனுபவிக்கப்**
**பட்ட அனுபவங்கள் என்றும் பற்பலவா விரிந்த**
**விதம் ஒன்றும் தெரியாதே மயங்கிய என்தனுக்கே**
**வெட்ட வெளியா அறிவித்திட்ட அருளிறையே**
**சதம் என்னும் சுத்தசிவ சன்மார்க்கப் பொதுவில்**
**தனிநடஞ்செய் அரசே என் சாற்றும் அணிந்தருளே!**

**– வள்ளலார்**

உண்மைகளை – நல்ல வழிகாட்டுதல்களை

**அண்டசராசரம் அனைத்தையும் பிறவையும்**
**எண்தர விளக்கும் என்தனிச் சித்தே (1236)**

வழங்கினர். ஆனால், மனிதன் மாறவில்லை. உயர்ந்த மனிதர்களின் வழிகாட்டுதல்களால் மனிதன் உயர்வடைவான் எனும் நம்பிக்கை தேய்கிறது. ஆகவே, குறைகள் அற்றவனே – நிறைகளைக் களைபவனே உன்னிடம் ஒரு கோரிக்கை, கோடி நடவடிக்கை நீயே எடுத்திடலாமே. உயர்ந்த மனிதர்களையே உருவாக்கிவிடு. மதமோகத்தை மறைத்து ஒழி. மனிதநேயத்தை மலரச் செய். மனித நேயம் மலர்ந்தால் அன்பு அடைக்குந் தாழின்றி, அனைவர் உள்ளங்களிலும் நிறையும். ஏற்றத்தாழ்வுகள் அகலும். திருவுடையோரெல்லாம் அறிவுடையவர் ஆவர். உழைப்புக்கு உரியன கிடைக்கும். இறுதியாக, ஒரு எச்சரிக்கையோடு விடைபெறுகிறேன். நீ, அறியொணாப் பொருளாகவே இருத்தல் நலம். இன்றைய மனிதன், ஒரு வேளை உன்னைப் பார்த்துவிட்டால், வந்தது ஆபத்து. உன்னையும் விலைபேசி விற்றுவிடுவான். அல்லது உனது மூளையை சலவை செய்திட முயற்சிப்பான். உன்னை வாங்குவதற்கு, மூட்டை, மூட்டையாக பணம் குவித்திருப்போர், இங்கு ஏராளமானோர் உளர். உன்னை வாங்கிட போட்டிகள் நடந்தாலும் நடக்கும். அறியொணாப் பொருளே! ஆருயிர் அனைத்தையும் அன்பால் பிணைத்திடு. தக்க தருணமிது. தாமதிக்காதே.



**இலட்சுமணசாமி**
இராணிப்பேட்டை
08056438488

---

## சென்னை வேளச்சேரி தீபம் அறக்கட்டளையின் சார்பில் கோடைக்காலத்தை முன்னிட்டு கடந்த மூன்று மாதங்களாக தினசரி மதியம் 12 மணி அளவில் மக்களின் தாகம் தணிக்கும் பொருட்டு நீர் மோர் வழங்கபடும் காட்சி









**எல்லாம் வல்லசித்து எனமறை புகன்றிட**
**எல்லாம் விளக்கிடும் என்தனிச் சித்தே (1238)**